# வடமராட்சி கிழக்கில் இரவு குண்டு வீச்சு பற்றைக் காடுகள் தீப்பற்றி எரிந்தன

வடமராட்சி கிழக்கிலுள்ள குடாரப்பு பகுதியில் நேற்று முன்தினமிரவு 'அவ்ரோ' விமானத்திலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் ஆறு பீப்பாய்க் குண்டுகள் விமானத்திலிருந்து வீசப்பட்டன. இவை வெடித்து தீச்சுவாலைகள் உயரத்தில் எழுந்ததை நெடுந்தூரத்தில் இருந்து பார்க்கக் கூடியதாக இருந்தது. இக் குண்டுகள் காட்டுப்பகுதியில் விழுந்ததால் மரங்கள் எரிந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. தாளையடிப் பகுதியில் நேற்று நண்பகல் விமானத் தாக்குதல் இடம்பெற்றது. குண்டுகள் வெடித்துப் பல வீடுகள் தரைமட்டமாகின. ஹெலியிலிருந்தும் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இப் பகுதியில் மக்கள் இடம் பெயர்ந்ததால் கைவிடப்பட்டுக் கட்டாக் காலியாகத்திரியும் ஆடு, மாடுகளும் இக் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகி மடிந்துள்ளன. ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட பற்றைக்காட்டுப் பகுதியில் விமானப்படை — 04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 234 பிரசோற்பத்தி ஆடி 04 ( 20 - 07 - 1991 ) சனி

# கட்டைக்காட்டு படையினரின் முயற்சி கைவிடப்பட்டது

## மூன்று தினங்களில் விடுதலைப்புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர்

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப்பகுதி இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டுவிட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

தரையிறங்கிய இப்படையினர் மூன்று முறை ஆனையிறவை நோக்கி முன்னேற முயன்றனர். மூன்று முறையும் விடுதலைப்புலிகள் தொடுத்த கடும் தாக்குதலினால் தமது முயச்சியைக் கைவிட்டனர். படையினர் தரப்பில் பலர் உயிரிழந்தனர். இம்மோதல்களில் தரையிறக்கப்பட்ட படையினரின் எட்டில் ஒரு பங்கினர் காயமடைந்தநிலையில் யுத்தமுனையில் இருந்து அகற்றப்பட்டு விட்டமை தெரிந்ததே.

இதேவேளை நேற்றுப்படையினர் தரப்பிலிருந்து எந்த விதமான தாக்குதலும் இடம் பெறவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கட்டைக்காட்டுப் படையின் மூன்று திசைகளில் விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து படையினரை முடக்கி வைத்துள்ள —04ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவை களஞ்சியம் சேதம்

நேற்று முன்தினம் மாலை தாளையடிப்பகுதியில் அவ்ரோ விமானம் பீப்பாய்க் குண்டுகளை வீசித்தாக்குதல் —04 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் தாக்குதலுக்கு பொம்மர் இலக்கு?

கட்டைக்காடு, வெற்றிலைக் கேணியில் நேற்று முற்பகல் வரையும் குண்டு வீச்சுத்தாக்குதல் கடுமையாக இடம் பெற்றது. விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பு ஆயுதத் தாக்குதலுக்கு குண்டுவீச்சு விமானம் இலக்காகியதைத் தொடர்ந்து பொம்மர் விமானம் உடனடியாகக் குண்டு வீச்சை நிறுத்தி விட்டு அப் பகுதியை விட்டுச்சென்றது. —04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத் தளபதி வடபகுதி விஜயம்

ஸ்ரீ லங்கா இராணுவத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க நேற்று வடபகுதிக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவர் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் சென்றதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. மாலையில்கொழும்பு திரும்பிய அவர் ஆனையிறவுப் பகுதிகளில் கடும் மோதல் நடைபெறுவதை ஒப்புக் கொண்டார்.

ஆனையிறவு நோக்கி வடமராட்சி கிழக்கில் இருந்து படையினர் முன்னேறுவதாகவும் அவர்கள் முகாமிலிருந்து சில யார் தூரத்தில் வந்துள்ளதாகவும் அவர் கூறினாராம்.

படையினர் முன்னேறாமல் இருக்க புலிகள் தாமாக வந்து படையினருடன் மோதுவதாகவும் ஜெனரல் வணசிங்க குறிப்பிட்டார்.

## பலாலியில் இருந்து இரவு ஷெல் தாக்குதல்

நேற்று இரவு பலாலிப்பகுயில் இருந்து ஷெல், வெடிச் சத்தங்கள் ஒரு மணிநேரமாக கேட்ட வண்ணம் இருந்தன.

பலாலியிலிருந்து தொண்டமனாறு பக்கமாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை நேற்று மாலை காரைநகர்ப் மகுதி பகுதியில் இருந்தும் குடிமனை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ப 24, 5)

## வங்காலைப் படைமீது சிறுநாவற்குளத்தில் தாக்கு

மன்னார் மாவட்டம் வங்காலை முகாம் இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை நாகதாழ்வு பகுதிக்கு வந்து அங்கிருந்து ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

பின்னர் இவர்கள் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

நேற்றுக் காலை மீண்டும் வங்காலைப் படையினர் வெளியேறி சிறுநாவற்குளம் பகுதிக்கு முன்னேறிவந்தனர்.

இப்பகுதியில் வைத்து படையினர் மீது புலிகள் எதிர்த் தாக்குதல் நடாத்தவே சிறுநாவற்குளத்திலேயே படையினர் தங்கியுள்ளனர்.

## அகதிமுகாமருகே விமானக்குண்டு வீச்சு

செம்பியன்பற்றில் இடம் பெயர்ந்தோர் தங்கியிருந்த முகாமுக்கு அண்மையில் விமானத்தில் இருந்து குண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 1. 00 மணியளவில் நடைபெற்றது.

அப்பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் நாலா — 04 ஆம் பக்கம் பார்க்க

## இரவு நேரம் ஹெலித் தாக்குதல் தந்தையும் மகனும் ஸ்தலத்தில் பலி

அச்சுவேலியில் நேற்று இரவு எட்டு மணியளவில் ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் தகப்பனும் மகனும் ஸ்தலத்தில் பலியானார்கள்.

பலாலிப் பக்கமாகப்போய்க் கொண்டிருந்த இந்தக் ஹெலிகப்டரில் இருந்து இரு குண்டுகள் ஒரு வீட்டின் மீது போடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீட்டில் இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த நல்லையா ஆறுமுகம் (51) (அச்சுவேலி றோ. க. பாடசாலை அதிபர்) அவரது —04ஆம் பக்கம் பார்க்க

## ஒப்பரேஷன் பலவேகயவில் பீரங்கிப் பாவனை இல்லையாம்!

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினர் தொலைதூரப் பீரங்கி எதையும் உபயோகிக்கவில்லையாம்.

இத்தகவலைக் கொழும்பில் வெளியிட்ட அதிகாரி ஒருவர் படையினர் இருக்கும் இடத்தை புலிகள் அறிந்து கொள்வதைத் தவிர்க்கவே இத்தகைய பீரங்கிகளைப் பாவிக்கவில்லை என்றார்.

தொலை தூரப்பீரங்கிகளை பாவிப்பதன் மூலம் ஆனையிறவு இராணுவ முகாமும் பாதிக்கப்படலாம் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்...

## யுத்தமுனையிலிருந்து அகற்றப்பட்டவர்களுக்காக மற்றுமோர் ராணுவப்பிரிவு கரையிறக்கம்

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மேலும் ஒரு தொகுதிப் படையினர் கரையிறக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இப்புதிய படைப்பிரிவினர் இயக்கச்சி தென்னந்தோட்டப்பகுதியை நோக்கி முன்னேற முயற்சிப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே முன்னர் இப் பகுதியில் மூன்று படைப் பிரிவுகள் கரையிறக்கபபட்டமையும் அவர்கள் ஆனையிறவு நோக்கி முன்னேற முயற்சிப்பதும் தெரிந்ததே.

புலிகளின் தாக்குதலில் முன்னர் கரையிறக்கப்பட்ட படையினரில் பெரும் பகுதியினர் பலியாகியும் காயமடைந்தும் யுத்தமுனையிலிருந்து அகற்றப்பட்டனர்.

இவற்றை ஈடு செய்யவே புதிய படைப்பிரிவு அங்கு இறக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நேற்று நடைபெற்ற மோதலில் 15 படையினர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

# சிதறிக்கிடக்கும் சிப்பாய்களின் சடலங்களைமீட்கமுடியாநிலை!

ஆனையிறவு மோதலில் இறந்த சிப்பாய்களின் சடலங்களைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக மீட்க முடியாது உள்ளதாகக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஆனையிறவு மோதலில் 64 படையினர் பலியானதாக அரசு அறிவித்திருந்தது. இவர்களின் சடலங்கள் எதுவும் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவில்லை

இதேவேளை புலிகளின் கடும் தாக்குதல்கள் காரணமாக இறந்த, காணாமற் போன, காயமுற்ற சிப்பாய்களின் பட்டியலைத் தயாரிக்க முடியாதநிலையும் படையினருக்கு ஏற்பட்டுள்ளதாம்.

## கடும் நோயாளர் கொடுப்பனவு; அடுத்த சில தினங்களில் கிடைக்கும்

கசரோகம், புற்றுநோய்' தொழு நோய்களுக்கான வைகாசி, ஆனி மாதங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய அனுமதியை யாழ்- சமூகசேவைப் பணிப்பாளர் வழங்கியுள்ளார்.

யாழ்-மாவட்டத்தின் உதவி அரச அதிபர்கள் இக் கொடுப்பனவிற்கான அனுமதியை யாழ் செயலகத்தின் சமூக சேவைப் பகுதியில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பனவுகள் யாவும் அவ்வப் பகுதி உதவி அரச அதிபர்களால், அல்லது அவர்கள் குறித்துரைப்பவர்களால் உதவி அரச அதிபர் பணிமனைகளிலோ அன்றி அவரால் குறித்துரைக்கப்படும் இடங்களிலோ வழங்கப்பட இருப்பதாக மேலும் தெரியவருகிறது.

1991 பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்தக் கொடுப்பனவுகளும் இக் கொடுப்பனவுகளுடன் சேர்த்து வழங்கப்படவிருக்கின்றன. வழமை போல இக்கொடுப்பனவுகள் தபால்அலுவலகங்களின் மூலம் வழங்கப்படுமென்றும், உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவர்கள் மேற்படி கொடுப்பனவுகளைத் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (47)

## கயூம் வருகிறார்

மாலைதீவு ஜனாதிபதி அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அவர் இங்கு ஜனாதிபதி பிரேமதாஸாவையும் சந்திப்பார்.

மாலைதீவில் புரட்சியில் ஈடுபட்டுத் தடுத்துவைக்கப்பட்டுப் பின்னர் இலங்கைச் சிறைகளுக்கு மாற்றப்பட்ட புளட் உறுப்பினர்களை விடுவித்தமை, இலங்கை மீனவர்களை மாலைதீவில் தடுத்து வைத்தமை ஆகிய காரணங்களினால் இலங்கை- மாலைதீவு உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே.

## சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை

வட பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தியதைத் தொடர்ந்து க.பொ.த. சாதரணதர பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசித்திகதி சென்ற 15 ஆந் திகதியாகும். ஆனால் ஊரடங்குச் சட்டம் காரணமாக கடந்த 10 ஆம் திகதி முதல் இங்குள்ள தபால் நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன.

இதேபோல மருத்துவ மாதுபதவிக்கும் விண்ணப்பிக்கமுடியாத நிலை இங்குள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. (33)

## பெயரளவில் சின்னராசா; மேதாவிலாசத்தில் பெரியராசா

கலைஞர் பெருமக்கள் காலாதிகாலமாக வாழ்ந்து வரும் இணுவில் கிராமத்தில், கலைஞர் மரபில் தோன்றி, வளர்ந்து, கலையில் ஈடுபாடு கொண்டு, கைதேர்ந்து, மதிப்புயர வாழ்ந்தவரே அமரர் சின்னராசா. அவரது பெருமை பேசப்படுகிறது; பேசுவோர் நெஞ்சத்தின் கவலையுணர்வும் தெரிகிறது. ஆழ்ந்து சிந்தித்து, மரணத்தின் இயல்பறிந்து ஆறுதலடைவோருமுண்டு.

அவரது கம்பீரமான தோற்றம், மிடுக்கான நடை; ஆடை ஆபரணச் சிறப்பு, வெண்ணீற்றுப் பூச்சு, நெற்றியை நிறைக்கும் சந்தனப் பொட்டு ஆகிய இவ்வளவும் அவரது மேடைச் சிறப்புக்குக் கட்டியங் கூறுமே. தவிலை மடியிலிருத்தி அணைத்து வைத்திருக்கும்போதே நாதவொலிகேட்பது போன்றதோர் பிரமையுண்டாகும். அன்னாரைச் சூழ்ந்து அல்லது அவரோடு இணைந்து கச்சேரி செய்யும் வித்துவான்களின் முகத்திலே அமைதி குடிகொண்டிருக்கும் அடக்கமிருக்கும், தொழில் நுணுக்கங்களை அறியும் நாட்டமும் தெரியும். அவரது விரல்களின் நிர்ணயம் பிசகாத விதவிதமான அசைவுகளால் விதவிதமான சங்கதிகள் பேசும். அதைக் கேட்போர் மனம் அங்கேயே லயிக்கும். பொழுது போவதே தெரியாது,

அமரர் சின்னராசா அவர்களது அண்ணன், பிரபல நாதசுர விற்பன்னரான திரு N. R. கோவிந்தசாமி அவர்கள். இணுவிலில் வாழும் வித்துவான்கள் எல்லோருமே அவரது நெருங்கிய உறவினர்கள். ஒருவரை ஒருவர் நேசிப்பவர்கள். தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவார்கள். பக்கபலமாயும் இருப்பார்கள். அவர்களிடையே போட்டியில்லை; பொறாமையுமில்லை அவர்கள் நல்லதோர் சமுதாய அங்கத்தவர்கள்.

அமரருக்கு நல்ல வாரிசுகள் உள்ளனர். புலிக்குப் பிறந்தது பூனையாகாது. ஆகவே அவர்களும் புகழேணியின் உச்சம் வரை போவார்களென்று கலையுலகம் நம்புகின்றது எதிர்பார்க்கிறது.

அமரரது மிடுக்கான தோற்றங்கண்டு அஞ்சுவாருமுண்டு அவரை அணுகிப் பழகிப்பார்த்தால் அவரின் பண்பாடு தெரியும், இளகிய நெஞ்சிலே சுரக்கும் அன்பின் ஆழமும் தெரியும். மேனி வண்ணம் அழகான கறுப்புத்தான் உள்ளத்தின் வண்ணமோ நல்ல வெளுப்பு! இந்த இயல்புகளே அவரை நெஞ்சத்திலிருத்திப் போற்றவைக்கிறது.

அவர் 24 - 03 - 1934 இலே பிறந்தார். இந்தப் பிறப்பெண்ணும், நட்சத்திர பலமும் அவருக்கு இவ்வளவு பெருமை கிடைக்குமென்பதை முன்னரே உணர்த்தி விட்டதாகச் சோதிடவல்லுநர்கள் பலர் அன்று அங்கே பேசிக்கொண்டார்கள்.

இவரின் மேதைத் தனத்தை — வித்வத் தன்மையை வியந்தளித்த பட்டங்கள்தாம் எத்தனை? பாராட்டுதல்களில் அடங்கிய உண்மையின் அழுத்தந்தான் எவ்வளவு? இவையெல்லாம் நம்மவரை வியக்கவே செய்கின்றன; அவரிடத்தில் அலாதியான அன்பையும் மதிப்பையும் உருவாக்கியுள்ளன.

இசையுலகம் என்ற ஒன்று இங்கே இருக்கும் வரை அன்னாரின் நாமம் நிலவும்; நிற்கும்!

— அ. நமசிவாயம்

(இன்று அமரரின் அந்தியேட்டி; அவர் ஆத்மா சாந்தி அடைவதாக!)

## செஞ்சிலுவையின் சேவை

யாழ் மாவட்டத்தில் சேவையிலீடுபடும் சுகாதாரத் திணைக்கள அம்புலன்ஸ் வண்டிகளுக்கு நோயாளர் நலன் கருதி மேலதிகமாக தாம் எரிபொருளை வழங்கி வருவதாக யாழ் செஞ்சிலுவைச்சங்கம்தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்களுக்கு சுகாதாரப் பணிப்பாளரே எரிபொருளை வழங்குவார் எனினும் செஞ்சிலுவைச் சங்க உத்தியோக பாவனைக்கு வழங்கப்படுகின்ற எரிபொருளை முடிந்தளவு துவிச்சக்கர வண்டிகளை பிரயாணத்துக்குப் பயன்படுத்தி மீதப்படுத்தி அதனை உயிர் காக்கும் பணிக்குத் தாம் வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


## சிறுவிளம்பரம்

### தேவை

நாற்று மேடைக்குச் செம்மண் செம்பாட்டுமண்) ஒரு லான்ட் மாஸ்டர் பெட்டி கொள்வனவு தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவும். மில்க் வைற் யாழ்ப்பாணம். 07083

### விற்பனைக்கு

வேப் பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கச் சிறந்தது. பயிர் காப்புக்கு உகந்த பூச்சி பீடை கொல்லி. போத்தல் ரூபா. 90/-, அரைப் போத்தல் ரூபா. 45/- (போத்தலுடன்) ''மில்க் வைற'' யாழ்ப்பாணம் 07084


விடுதலைப் புலிகளின் கலை - பண்பாட்டுக் கழகம எடுத்த முத்தமிழ் விழாக்கவியரங்கில் உதிர்த்த முத்துக்கள் சிலவற்றைக் கோத்துத் தருகிறோம்:

கோவை - 5

## சோகப் பா

நாற்றெடுத்துப் போட்டதெல்லாம்நெல்லாச்சு!-அட!
நல்ல தமிழ்ப் பரம்பரையேன் கல்லாச்சு?
நேற்றுவரை உட்பகையே நோயாச்சு!-நம்
நெருக்கந் தான் பகைவருக்குத் தீயாச்சு!

□ □ □

காத்திருந்தோம் விடுதலையின் காவலரும் நாமே!
கறைகொண்ட பகை போக்குங் காரியமும் நாமே!
பூத்திருந்தோம் விடுதலைப் புண்ணேந்திச் சுமந்தே!
புரட்சியிலே குளிர்காயும் புதுமையிலே மிதந்தே!
மூத்திருந்தோம் தமிழாலே; முன்னேறும் நாளை,
மூச்சிருக்கும் விடுதலையால் முயல்கின்ற வேளை,
பார்த்திருந்தோம் வருகின்ற பலநூறு துயரம்!
பாதித்தும் விடுதலையின் பணிமூச்சோ உயரும்!!

□ □ □

''ஷெல்'' விழுங்கிப் போய் விட்ட,
சிறு மகவின் தாயொருத்தி,
சொல் முழங்கிப் பாடிவரும்,
சோகப்பா கேளீரோ!
சின்னஞ்சிறு குருத்தே! சிரிக்கின்ற தளிர்முகமே!
கன்னங் குவிந்தழகுக் கதை கூறுஞ் சித்திரமே!
வண்ணக் கரமசைத்தே, வாயாடுஞ் சிறு நிலவே!
எண்ணஞ் சுமந்திருக்கும், இணையில்லாப் பெட்டகமே!

என்ன தவறிழைத்தாய்? ஏனுன் உயிர்பறித்தார்?
சின்ன மணிப்பறவைச் சிறகுதனை ஏன் முறித்தார்?
கொள்ளை அடித்தாயா? கொலைகள் புரிந்தாயா?
முள்ளை விதைத்தாயா? முகம் மாறிப் பழித்தாயா?
இல்லை, சதியேதும் இவ்வுலகிற் செய்தாயா?
வெள்ளைச் சிறு குழந்தாய்! வேரோடு ஏன் சரிந்தாய்!

விழிமுழுதுங் குறும் பேந்தி, விளையாடும் புதையலினை,
வழி முழுதும் பார்த்திருக்கும், வரமினியுங் கிடையாதோ!

வாசம் எடுத்துலகில், வாழப்பிறந்த மலர்
நாசம் எடுத்தவரால், நாளிற் சிதைந்ததடா!

— கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன்

(வளரும்)


மனைக்கு வெளியே ஒரு மனை,
அந்த மனையில்
ஒரு நாள் பொழுதைக் கழியுங்கள்

ஆம்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்**

நீங்களும் அந்த மனைக்கு ஒரு முறை
அழைக்கப்படுகின்றீர்கள்

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்**

**19 / 3, கொழும்புத்துறைச்சாலை**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை

**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

உங்கள் உணவு வகைகளுக்கு நாங்கள் மேலும் சுவையூட்டுகிறோம்.

பார்சல் ஒன்று 29 ௰ மட்டுமே

விளம்பர அமைப்பு: செனித் விளம்பர முகவர்

07091


உ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவர்

**தவில் வித்துவான்**

**என். ஆர். சின்னராசா அவர்களின்**

அந்தியேட்டிக் கிரிகைகள் இன்று சனிக்கிழமை காலையிலும், வீட்டுக்கிருத்தியம் நாளை(21-07-1991) ஞாயிற்றுக்கிழமை பகல்10-00 மணிக்கும் எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எங்கள் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அன்னை, மனைவி, மக்கள், மருகர்.

கந்தசாமி கோவில் வீதி,
இணுவில்.

A-07090

## மோசடி செய்யும் அதிபர்கள் கணக்கெடுப்பில் அகப்பட்டனர்

பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சொத்துக்களின் இழப்புக்களை சில அதிபர்கள் தவறான முறையில் பதிவு செய்துள்ளமை யாழ் கல்வித் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகள் மீது நடாத்தப்பட்டுவரும் 1990 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த கணக்கெடுப்பின்போது இவ்விடயம் அம்பலத்திற்கு வந்தது.

பாடசாலைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் சம்பந்தமாக யாழ் கல்வித் திணைக்கழத்துக்கு அறிவிக்கப்பட்டது என பொருள் பதிவேட்டுப்புத்தகத்தில் ஒரு பதிவைச் செய்துவிட்டு பொருள் பதிவேட்டுப் புத்தகங்களை அதிபர்கள் சமப்படுத்தி உள்ளமை இக் கணக்கெடுப்பின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான எதுவித பதில் கடிதமும் கல்வித் திணைக்களத்தில் இருந்து அதிபர்களுக்குக் கிடைக்காமலேயே இவ்வாறு செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (78)

## பதிவாளர் அலுவலகம்

கிளிநொச்சி விவாக, இறப்பு, பிறப்புப் பதிவாளர் காரியாலயம் கிளிநொச்சிக் கச்சேரியிலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் செயற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (13)

## இரண்டு ஒன்றாகிறது
### லக்டோஜன்விற்பனையில்புதுமோசடி

‘லக்டோஜன்’ பால்மா விற்பனையில் சிலர் மோசடி செய்வதால் பாவனையாளர்கள் விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

6மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பயன்படுத்தப்படும் லக்டோஜன் - வாய்பாடுII ஒரு பெட்டி 110ரூபாவாகவும், லக்டோஜன் வாய்பாடு-I ஒரு பெட்டி 70 ரூபாவாகவும் தற்பொழுது விற்பனைசெய்யப்படுகின்றது.

இந்த விலை வித்தியாசத்தைப் பயன்படுத்தி வண்ணார் பண்ணை கிழக்குப் பகுதியிலும் மற்றும் சிலபகுதிகளிலுமுள்ள சில விற்பனை நிலையங்களில் வாய்பாடு - II எனக் குறிக்கப்பட்ட பெட்டிகளினுள் வாய்பாடு - I க்குரிய பால்மா பைக்கட்டுக்கள் வைத்து விற்பனை செய்யப்படுவதாகவும் எனவே பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# சிப்பாய்களுக்குச் சிகிச்சை இல்லை!
## ‘மனோவியல் சிகிச்சை’ வழங்குகிறது அரசு

கட்டைக்காட்டில் கரையிரங்கிய இராணுவம் கடந்த ஐந்து நாள்களாக விடுதலைப்புலிகளின் என்றுமில்லாத தாக்குதலினால் முன்னேற முடியாதுள்ள இவ்வேளையில், ஆனையிறவில் சிக்கிப் போயுள்ள சிப்பாய்களுக்கு ‘மனோவியல் சிகிச்சை’ அளிக்கும் முயற்சியில் அரசு தற்பொழுது ஈடுபட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

‘கட்டைக்காட்டில் கரையிறங்கிய இராணுவம் ஆனையிறவை நெருங்கிக் கொண்டிருக்கிறது, பெருமளவு போராளிகள் கொல்லப்பட்டு விட்டார்கள், முற்றுகை முறியடிக்கப்படும் நிலையிலுள்ளது’ என்றவாறான செய்திகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கைகளில் அடிக்கடி ஒலிபரப்பிவருகின்றது.

கோட்டை முற்றுகையின் போது மண்டைதீவு இராணுவம் கச்சேரியை அடைந்து விட்டதாகவும், யாழ் நகர் கட்டுப்பாட்டுக்குள்வந்துவிட்டதாகவும் ஒலிபரப்பப்பட்ட செய்திகளை யொத்த சிப்பாய்களுக்கான ‘மனோவியல் சிகிச்சை’யே இது வெனவும் கூறப்படுகிறது.

## சம்பளம் வழங்கப்பட்டது

வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களது இம்மாத வேதனம் நேற்றைய தினம் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (78)

## வர்த்தகர்கள் கைது

வர்த்தகச் சட்டத்தை மீறியமைக்காக நாடு முழுவதும் கடந்த ஒரு வார காலத்தில் 570 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு வர்த்தக இலாகா இவர்களைக் கைது செய்துள்ளது.

## முல்லையிலிருந்து வடக்கே வர இராணுவம் முயல்கிறதாம்

முல்லைத்தீவு கொக்குவேலியிலிருந்து யாழ் வீதி வழியே வடக்கே வர இராணுவம் முயற்சியெடுப்பதாகக் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனையிறவு மூகாம் முற்றுகையை முறியடிக்கவே இந்த முயற்சி எடுக்கப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## ‘லாச்சிகளை மூடி வையுங்கள்’
### எயர்லங்கா ஊழியர்க்கு அறிவுறுத்தல்

கொழும்பு நகரில் உள்ள எயர் லங்கா நிறுவனத்தின் அலுவலகங்களில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்குள் வருவோர் ஊழியர்கள் யாவரும் தத்தமது அடையாள அட்டைகளை அணிய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

இங்கு பணிபுரிவோர்மிகஎச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனவும், தத்தமது மேசை லாச்சிகளை மூடி வைக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

எயர்லங்கா ஊழியர்களின் நண்பர்களோ, உறவினர்களோகடமை நேரத்தில் அலுவலகத்திற்கு வரும்போது அவதானமாக இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

ராஜீவ் கொலை தொடர்பாகவெள்ளையறிக்கையொன்றைச்சமர்ப்பிக்குமாறுபாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இக்கொலைக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் இவ் வெள்ளையறிக்கையில் விளக்கமளிக்குமாறும் எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன.

## இரக்கக்கொலை புரிந்த வைத்தியர் வேலை நீக்கம்

ஜப்பான் நாட்டில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிறு நீரகக் கோளாறு, புற்றுநோய் முதலியவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நோயாளி அனுபவித்த சொல்லொணா வேதனையைக் காணச் சகிக்கமுடியாத வைத்தியர் ஒருவர் கடந்த மாதம் 14 ஆம் திகதி அந் நோயாளிக்கு விஷ ஊசி ஏற்றி அவர் அனுபவித்த வேதனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

டோக்கியோவில் உள்ள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 34 வயதான அந்த வைத்தியர் தான் செய்தது ‘இரக்கம் நிறைந்த கொலை’ என்று வாதிட்டாலும் அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. வைத்தியர் நெறி முறை தவறிச் செயற்பட்டுள்ளார் என்று கூறி அவரை வேலை நீக்கம் செய்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நோயாளியின் உறவினர்கள் அவருக்கு சிகிச்சை செய்வதை நிறுத்தி அவரைச் சாக விடுமாறு கேட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 16

## காவலிலிருந்து தப்பியவர் பலி!
### தாய்க்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு

பொலிஸ் காவலிலிருந்து தப்பியோட முயன்றபோது பலியானவரின் தாய்க்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு சென்னை நீதிமன்றம் தமிழகப் பொலிசைப் பணித்துள்ளது,

சென்னை தொலைக்காட்சி நிலைய ஊழியரான ஜான் அந்தனி என்பவர் 1989 சட்டசபைத் தேர்தலில் கள்ளவோட்டுப் போட முயன்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம் தப்பி ஓட முயல்கையில் ரயிலில் மோதி மரணமாகியிருந்தார்.

பொலிஸாரின் கவனயீனமே தனது மகனின் மரணத்துக்குக் காரணமெனவும் அதற்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் குறித்த நபரின் தாய் தொடுத்திருந்த வழக்கு விசாரணையின் இறுதியிலேயே ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்த நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## தொழில் நுட்ப ஊழியர் கூட்டம்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின்சகல நிரந்தரப்,பகுதி நேர விரிவுரையாளர்கள் அலுவலகப் பணிப்பாளர்கள் அனைவரையும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை. 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ள கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு நிர்வாகம் கேட்டுள்ளது.(ப-7)

## 23 பேர் பலி; 562 பேர் பாதிப்பு
### டெங்கு தீவிரமாகப் பரவுகிறது

டெங்குக் காய்ச்சலுக்கு கடந்த சில மாதங்களில் மட்டும் இலங்கையில் 23 பேர் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

562 பேர் டெங்கு காய்ச்சலினால் தற்பொழுது பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடும் மழையைத் தொடர்ந்து நுளம்புகள் பெருகியுள்ளதினால் அடுத்த மாத இறுதியில் இத் தொகை மேலும் அதிகரிக்கலாமெனவும்சுகாதார அமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## அமெ. சத்திரசிகிச்சைக் குழுவில் தமிழ் டாக்டர்களுக்கும் இடம்

இருதய நோய்க்கான சத்திரசிகிச்சை நிபுணர் குழுவொன்று அடுத்தமாதம் அமெரிக்காவில் இருந்து கொழும்பு வரவுள்ளது.

டாக்டர் ரொனி டொன் மைக்கல் தலைமையிலான இக்குழுவில் தமிழ் டாக்டர்களான ரீ. மகேந்திரன், தியாகராஜா ஆகியோரும் அடங்குவர்.

கோட்டை ·ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் ஆகஸ்ட் 11 ஆம் திகதி ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒருவருக்கு இவர்கள் இருதயநோய் சத்திரசிகிச்சையை மேற்கொள்வார்கள்.

ஒரு சத்திரசிகிச்சைக்குரிய செலவு ஒருலட்சம் ரூபா என்றும், மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## சங்கானையில் புதிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இம் மாதம் தொடக்கம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு சங்கானை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவு என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இப் புதிய பிரிவுக்கு சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் (செல்வி) வி. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். (13)

# என்ஜினியரை பொலிஸ் தாக்கியது!
## ரூ. 25 ஆயிரம் நஷ்டஈடாகச் செலுத்த உத்தரவு

பொலிஸாரால் தாக்கப்பட்ட சிவில் பொறியியலாளருக்கு அவரது காயத்துக்கு மருத்துவச் செலவாக இருபத்தையாயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்குமாறு உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஆண்டு மே 29ஆம் திகதி இந்தப் பொறியியலாளர் வீதியைச் செப்பனிடும் பணியில் ஊழியர்களுடன் மேற்கொள்ளும்போது பம்பலப்பிட்டிய பொலிஸார் இவரையும், ஊழியர்களையும் தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். (33)

## வைத்தீஸ்வரா இறுதிப் பரீட்சை

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவில் மின் உபகரண உற்பத்தி, மோட்டார் றீவைன்டிங் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ப-11

## சிப்பாய்களின் சடலங்கள் றாகமைக்கு

கட்டைக்காட்டில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரில் சிலரின் சடலங்கள் அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

றாகமைக்கு மட்டும் இந்த மோதலில் இறந்த நான்கு சிப்பாய்களின் சடலங்கள் எடுத்துச்செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிரான் குளத்தில் பலர் கைது

மட்டக்களப்பு செட்டிபாளையம் முகாமைச் சேர்ந்த படையினரும் ரெலோக் குழுவினரும் கிரான் குளம் பகுதியைச் சுற்றி வளைத்து ஆண்கள் பெண்கள் உட்படப் 11 பேரைக் கைது செய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை மீண்டும் இப்பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் மேலும் 13 பேரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

ரான்ஸ் தூதரகம் அறிவிப்பு

# பிரெஞ் விமான நிலையத்தில் தங்கவும் விஸா வேண்டும்!

பிரான்ஸ் விமான நிலையத்தில் இறங்கி மற்றுமோர் விமானத்துக்கு மாறுவதானாலும் இலங்கையர்கள் விஸா பெறவேண்டும்.

கொழும்பிலுள்ள பிரெஞ் தூதரகம் நேற்று இவ்வறிவிப்பை வெளியிட்டது.

விஸா எடுக்காதவர்கள் பிரெஞ் விமான நிலையத்தில் தங்கிநிற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஊடாக வேறு நாடுகளுக்கு விமானங்களில் செல்லும் இலங்கையர்கள் விமானம் பிரான்ஸில் தங்கி நிற்கும் போது பிரான்ஸிலேயே அரசியல் தஞ்சம் கோரி அங்கு தங்கி விடுகின்றனர்.

இதைத் தடுக்கும் முகமாகவே பிரான்ஸ் இப்புதிய உத்தரவை இலங்கையருக்கு விடுத்துள்ளது.

# ராஜீவ் கொலைக்கு சிங்குடன் ஒத்திகை!

ராஜீவ் காந்தி கொலைக்கான ஒத்திகை முன்னதாகவே வி பி. சிங் பிரதமராக இருந்த காலத்தில் செய்து பார்க்கப்பட்டுள்ளது.

முக்கிய பிரமுகர் ஒருவருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பை ஊடறுத்து எவ்வாறு அவரை அணுகுவது என ஒத்திகை பார்க்கப்பட்டது.

ராஜீவ் கொலை சம்பந்தமாகத் தற்போது தேடப்பட்டு வரும் சிவராஜன் இது தொடர்பான ஒத்திகையை வி. பி. சிங்கின் கூட்டம் ஒன்றில் செய்து பார்த்தமையும், பாதுகாப்புக்களையும் ஊடறுத்து இவர் வி. பி. சிங்கிற்கு அருகில் சென்றமையும் தற்போது அறியப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை ஒளிப்பதிவு செய்த வீடியோ கசற் ஒன்றை தற்போது இந்திய புலனாய்வுக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனராம்,

# ஊரடங்குச் சட்டத்தால் பணப்புழக்கம் பாதிப்பு

தொடர்ந்தும் வடமாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டு வருவதையடுத்து பணப்புழக்கம் பாதிப்படைந்து வருகிறது

இப்பகுதிகளில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகள் தொடர்ந்தும் செயலற்று வருவதினால் பணத்தைவைப்புச் செய்யவோ, வங்கியிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளவோ முடியாதிருப்பதோடு காசோலைகளையும் மாற்றமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச் சூழலைப் பயன் படுத்தி ஆயிரத்துக்கு முப்பது ரூபா கமிஷன் அறவிடும் வர்த்தகர்களும் தற்போது தமது கமிஷனையும் அதிகரித்துள்ளனராம். 38

# புதிய அகதிகளின் பதிவு இம்மாதம் முதல் நிறுத்தம்

இம்மாதம் 4ஆம் திகதியிலிருந்து புதிதாக அகதிகளைப் பதிவு செய்வது நிறுத்தப்படவேண்டும் என அத்தியாவசிய சேவைகள் நாயகம் வடபகுதியில் உள்ள அரசாங்க அதிபர்களுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

புதிய அகதிகளைப் பதிவு செய்வதோ நீக்கப்பட்ட அகதிகளுக்குப் பதிலாகப்புதிதாக அகதிகள் சேர்க்கப்படுவதோ கூடாது எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போது இடல் பெயரும் அகதிகள் பாதிக்கப்படலாம் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (38)

ஆனையிறவு ஷெல் தாக்குதல்

# கண்டாவளையில் இருந்து குடும்பங்கள் இடம் பெயர்வு

ஆனையிறவு இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களால் முரசுமோட்டை, கண்டாவளைப்பகுதிகளிலிருந்து ஆயிரம் குடும்பங்கள் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் அறுநூறு குடும்பங்கள் விசுவமடுவிலும், நானூறு குடும்பங்கள் கிளிநொச்சிப்பகுதியிலும் தஞ்சம் புகுந்துள்ளதாக முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கு நிவாரண உதவி மேற்கொள்ளப்போதிய உணவுப்பொருள் கையிருப்பில் இல்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன: 38

## இரவு ..

மகன் ஆ. கலைரூபன் (14) அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். அந்த வீடும் பலத்த சேதமடைந்தது.

இவரது மனைவி ஆ. சரஸ்வதி (47), ஆ, கலைமோகனதாஸ் (10) மகன், ஆ. கலைமகள் (15) - மகள் கடுமையான காயத்துக்குள்ளாகி பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வீட்டில் இருந்த அதிபரின் மைத்துனரான நாகன் கந்தசாமி (47) என்பவரும் படுகாயமடைந்துள்ளார்.

11. ப-24

## புலிகளின் ...

இதைத் தொடர்ந்து விமானங்கள் மிக உயரப் பறந்தே தமது தாக்குதல்களை குறைந்தளவில் நடாத்தின. (11

## வடமராட்சி...

யினரின் வான் தாக்குதல்கள் நேற்றும் இடம் பெற்றன.

புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல்களினால் விமானங்கள் உயரத்தில் இருந்தே கண்டபடி தாக்குதல்களை மேற்கொள்கின்றன.

இப்பகுதியில் மரங்கள் எரிவதைகாணக்கூடியதாக இருக்கிறது. 50,43

# குடாநாட்டு உணவு நிலைமை

# அரச அதிபர் ஜனாதிபதிக்குப் புகார்

யாழ் மாவட்டத்திற்குரிய உணவுப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்பாவிடில் இங்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிவரும் என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாதிபதிக்கு அவசரமாக அறிவித்துள்ளார்.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய வானொலித் தொடர்பு சாதனம் மூலம் நேற்று அவர் ஜனாதிபதியின் செயலாளருக்கு இங்குள்ள உணவுப் பொருள்களின் நிலைமை குறித்து விவரமாக தெரிவித்துள்ளதாகச் செயலக வட்டாரங்கள் மூலம் அறிய வருகிறது.

ஊரடங்குச் சட்டம் அமுலானதையடுத்துப் பருத்தித் துறையில் உணவுப்பொருள்களை இறக்கக் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அனுமதி மறுத்துள்ளதையடுத்தே அரசாங்க அதிபர் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளபோது பருத்தித்துறையில் உணவுப் பொருள்கள் இறக்க அனுமதி வழங்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (02)

# வவுனியாவில் படையினர் சூடு பெண்பலி; இருவர் காயம்

நேற்றுக்காலை வவுனியா பேயாடிக் கூழாங்குளம் பகுதியில் படையினர் கண்டபடி துப்பாக்கிச் சூடு நடாத்தினர்.

பேயாடிக் கூழாங்குளத்தில் தங்கியிருந்த படையினர் 75 யார் தூரம் முன்னே வந்து அங்கு நின்ற பொது மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தினர்.

இதில் இருவர் காயமடைந்தனர். பெண் ஒருவர் பலியானதாகச் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

# தபால் ஊழியருக்கு அவசர கூட்டம்

தபால் திணைக்களத்தின் பொறுப்புள்ள சகல அதிபர்கள், உதவித்தபாலதிபர்கள் உப அஞ்சல் அதிபர்கள், சிற்றூழியர்கள், பதிவு செய்யப்பட்ட பதிலாள்கள் அனைவரையும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்பிரதம தபாலகத்தில் ஒன்று கூடுமாறு யாழ் மாவட்டத்தபால் அத்தியட்சகர் எஸ். சடாட்சரநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (33)

# வட்டுக்கோட்டையில் மாவீரருக்கு அஞ்சலி

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு மோதலில் வீரமரணமடைந்துள்ள போராளிகளின் பெயர் விவரம் வருமாறு:-

சுதா (அச்சுதன் மகேந்திரன் - திருமலை), கஜன் (சுந்தரராஜன் மகேஸ்வரன்-அராலி, குமுதன் (வைத்திலிங்கம் தயாளன் - சிறுப்பிட்டி), மேகன் (ஆறுமுகம் அரசரட்ணம் -மூதூர்), குரு (பரராசசிங்கம் விமலேஸ்வரன் - யாழ் நகர்), சைமன் (யோசப் மைக்கன்சி பிரதிப் - மானிப்பாய்), கோகிலா (குணநாயகம் மங்கையர் திலகம்-திருகோணமலை), விஜிதா (சி. சிவராகினி - உரும்பிராய்). இப் போராளிகளின் புகழுடம்புகள் மக்கள் அஞ்சலிக்காக வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டமும் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி யாழ் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி, ரஞ்சன் மாஸ்ரர், குகதாஸ் மாஸ்டர், செல்வம் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

கோப்பாய் மாவீரர் மயானத்தில் இவர்களின் புகழுடம்புகள் தீயுடன்சங்கமமாகின.

தமிழீழ காவல்துறை கோரிக்கை

# பிரதான வீதிகளை இயலுமான வரை தவிர்க்க

பாடசாலை மாணவர்கள் வீதியாற் செல்லும்போது ஓரமாகச் செல்லுமாறும் கூட்டம் கூட்டமாகச் செல்வதைத் தவிர்க்குமாறும் தமிழீழக் காவல்துறை கோரிக்கை விடுத்துள்ளது.

இயலுமான வரை பிரதான வீதிகளைத் தவிர்த்து உட்பாதையூடாகச்செல்லுமாறும் மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் காவல்துறையினர் கேட்டுள்ளனர்.

# பருத்தித்துறை துறைமுகம் திருத்த அரசு மறுப்பு

பருத்தித்துறை துறைமுகத்தைத் திருத்தி அமைக்க அரசாங்கம் அனுமதி மறுத்து வருவதாகவும் காங்கேசன் துறை துறைமுகம் ஊடாக யாழ் மாவட்டத்திற்கு உணவுப் பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் உணவுப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்திதுறைதுறைமுகத்தைத் விஸ்தரிப்பதன் மூலம் கப்பலிலிருந்து துரிதமாக பொருள்களை இறக்க முடியும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் காங்கேசன்துறை ஊடாக உணவுப் பொருள்களை வழங்கும் யுக்தியாலேயேஇத்திட்டத்திற்கு அனுமதிமறுக்கப்பட்டுள்ளது எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (74,10)

# படையினரின் வாகனங்கள் மணலில் புதையுண்டன

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் சில வாகனங்கள் அப்பகுதி மணற்பாங்கான பகுதியில் சிக்குண்டு படையினரால் செலுத்த முடியாதிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன

சில வாகனங்கள் ஏற்கனவே மோதலின் போது புலிகளின் தாக்குதலுக்குச் சிக்கி சிதைவுண்டமை குறிப்பிடத்தக்கது

இதனால் படையினர் முன்னேறமுடியாதிருப்பதாகத் தெரியவருகிறது. மணல் பாங்கான நிலமாகையால் மேலும் வாகனங்களைப் படையினர் கொண்டுவர முடியாதிருப்பதாகத் தெரியவருகிறது. (50, 43)

## செஞ்சிலுவை...

நடாத்தியது

பீப்பாய்க் குண்டு வீச்சில் வடமராட்சிகிழக்குச்செஞ்சிலுவைச் சங்கக் களஞ்சியம் அமைந்துள்ள வீடும் சேதம் அடைந்துள்ளது. 18

## கட்டைக்காட்டு...

தாகத் தெரியவருகிறது.

படையினர் சிலயார் தூரம் முன்னேறி வந்தால் அவர்களைமுற்றாகசுற்றிவளைத்து தாக்குதலைத் தொடுக்கும் வகையில் புலிகள் நிலை எடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானத்தாக்குதல்கள் தொடர்ந்தும் இப்பகுதியில் நேற்று நடைபெற்றன. 43,50

# ராணுவ உயரதிகாரி அஞ்சலோ பீரிஸ் வடக்கு மோதலில் பலி!

வட பகுதியில் விடுதலைப் புலிகளுடனான மோதலில் இராணுவ உயர் அதிகாரியான அஞ்சலோ பீரிஸ் மரணமாகியுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கந்தானையைச் சேர்ந்த இவர் முன்னர் நாவற்குழி, குருநகர் முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்தவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குருநகர், நாவற்குழி முகாம்கள் இருந்த வேளையில் இவர் தீவிரமாகச் செயற்பட்டவரெனவும்சொல்லப்படுகிறது. 2

## அகதி ..

பக்கமும் அலறிக்கொண்டு ஓடினர்.

தெய்வாதீனமாக அக் குண்டு வெடிக்காததினால் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. (43- 50)

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கு

தற்போது நடைபெறும் போர்க்காலச் சூழலுக்கு ஏற்ப சகல தனியார் கல்வி நிறுவனங்களும் மறு அறிவித்தல் வரை எவ் வகுப்புக்களையும் நடாத்தாமல் போர்க்காலச் சூழலுக்கேற்ப ஒத்துழைக்கும் வண்ணம் யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றிய செயலாளர் வேண்டியுள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 20.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.